# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : **மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 99/மா/2023**
**நாள் : 04.07.2023**

திரு. M. மதன்ராஜ்,
சென்னை – 600 021. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–5, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, பழைய வண்ணாரப்பேட்டை, ஸ்ரீ ரங்கம்மாள் தெரு, எண்.112/86 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. D. மதன்ராஜ் என்பவரின் 16.03.2023 நாளிட்ட மனு 20.05.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 99/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, பழைய வண்ணாரப்பேட்டை, ஸ்ரீ ரங்கம்மாள் தெரு, எண்.112/86 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. D. மதன்ராஜ் தனது முறையீட்டு மனுவில்,

1. The complainant states that one M.P. Vasantharaj encroach the intersection of Srirangammal Koil Street and Thanigachalam Street Junction. Initially, it was a petty shop, which was later extended / encroached on the public road and converted into cubical Advocate office with the collusion of the some of the corporation officials. Further, the said M.P. Vasantharaj himself gave a identity to the encroached shed as No.132/92, Srirangambal Kovil Street, Old Washermenpet, Chennai – 600 021 and continue the same till date and the same was well aware of the respondents.
2. The complainant further states that since the aforesaid shop was located at the intersection of Srirangammal Koil Street and Thanigachalam Street Junction, due to the said encroachment, the public suffers greatly from traffic congestion. Further, the office is just adjacent to the Muthumarriamman Temple, devotees coming to that temple suffer greatly on auspicious days, such as Tuesdays and Fridays and also during festivals. Further, due to encroachment of public road, the road

width has been narrowed/reduced, which became a hindrance for ingress and egress of life saving vehicles such as ambulance, fire & rescue vehicles and public utility / emergency vehicles etc.,

3. The complainant further states that due to illegal encroachment of public road, the public lodged the complaint and the same was not taken into consideration by the respondents. Hence, complaint sent to the respondents on 03.08.2022 requesting them to take action against the said illegal encroached office and the same was duly received but deliberately failed to take steps. Furthermore, due to the said encroachment, there is huge traffic congestion during peak hours and also auspicious day.

4. Thereafter, complainant continuously knocks the doors of the respondents, on the persistent of complainant request second respondent officer visited the subject shed and found that the said M.P. Vasantharaj had illegally encroached the road, but they are hesitating to initiate appropriate legal action and the reason best known to this Hon'ble Forum, Further, it seems that the respondent always doing favour to the said illegal encroacher with second thought intention/consideration.

5. The complainant states that from reliable sources, as M.P. Vasantharaj belongs to a political party and also, he is influential in that area, it clearly establishes that the respondents are in collusion with Vasantharaj for their personal benefits and also to cover their illegal gain, hence the respondents did not initiate any legal action in accordance with law. Even though the respondents found that the subject shed is encroached one, the respondents blindly support the said encroached person and they are acting as a shield, Complainant is patiently waited several months for taking action against the said encroached property but with the support of the respondents the said M.P. Vasantharaj continuing his work in the subject shed.

6. The complaint states that the respondents have failed to discharge their function vested on them and refusing to initiate legal action against the said Vasantharaj deliberately, which clearly shows that they shown favouritism to a violator and encroacher. Further, the respondents wilfully shown favour to the said M.P. Vasantharaj and it is a clear irregularity on the side of the respondents even though they found that the subject shed is encroached one. Our Hon'ble High Court gave number of guidelines against the encroacher, especially against the public utility place. Here, the encroacher openly encroach the road. The respondents wilfully and deliberately failed to do his discharge his duty with the collusion of the said encroacher and hence the complainant before this Hon'ble Authority/Forum.

7. The complainant further states that this Hon'ble Tamil Nadu Local Bodies Ombudsman authority may be pleased to summon the respondents to appear before this Ombudsman and enquire the act of the respondents as per the Act. 2014.

It is, therefore, prayed that this Hon'ble Tamil Nadu Local Bodies Ombudsman may be pleased to pass the following orders:-

1. To refer the complaint to the appropriate authority to take disciplinary action against the respondents for wilful negligence/dereliction of duty as the public servant under this Act.
2. To remove the illegal occupation and encroachment of cubical office put up by the one M.P. Vasantharaj as a remedial measure for General Public.
3. Pass such or further or any other order/s as this Hon'ble Forum may be deem fit and proper in the circumstance and facts of the case herein and thus render justice.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 25.4.2023 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. அவர் தனது 29.05.2023 நாளிட்ட அறிக்கையில்:**

மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடம் ஏற்கெனவே ஆய்வு மேற்கொண்டு சம்மந்தப்பட்ட இடமானது ஆக்கிரமிப்புபோல் தென்படுவதால் இடத்தினை தாமாக காலி செய்வதற்கு 13.06.2022 தேதியிட்ட சென்னை நகர முனிசிபல் கார்ப்பரேஷன் IVஇன் 222 உடன் படிக்கப்பட்ட பிரிவு 220இன் கீழ் அறிவிப்பு அனுபவஸ்தரான திரு. M.P. வசந்த்ராஜுக்கு வழங்கப்பட்டது என்றும் அதற்கு திரு. வசந்தராஜ், அவர்கள் தம் அருகிலுள்ள கோவில் நிலத்தில் அலுவலகம் உள்ளதாகவும், குத்தகை ஒப்பந்தம் செய்து மாத வாடகை செலுத்தி வருவதாகவும், நில உரிமை சான்று உரிமையாளர்களிடம் இருந்து அசல் ஆவணங்கள் சமர்ப்பிப்பதில் காலம் தாழ்த்தி வந்ததால் தண்டையார்பேட்டை தாசில்தார் அலுவலகத்தில் இருந்து நில ஆவணங்கள் பெறப்பட்டு, அதன்படி பட்டா நிலத்திற்கு மேலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும் தவறினால் சென்னை மாநகராட்சியால் அகற்றப்படும் என்றும், பட்டாவின்படி தனது இடத்தில் 1.45 மீட்டர் 2.55 மீட்டர் அளவுள்ள இடம் கூடுதலாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக கண்டறியப்பட்டு 28.05.2023 அன்று திரு. M.P. வசந்தராஜ் அவர்கள் தாமாக முன்வந்து கூடுதலாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட ஆக்கிரமிப்பை அகற்றியுள்ளார் என்று தெரிவித்துள்ளார்."

எனவே மனுதாரர் திரு. மதன்ராஜ் அவர்களின் புகார் மனு மீது பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என சமர்ப்பிக்கப்படுகிறது என குறிப்பிட்டுள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 22.06.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 12.6.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 22.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:

சென்னை பழைய வண்ணாரப்பேட்டை ஸ்ரீரங்கம்மாள் தெரு, தாண்டவராயன் தெரு சந்திப்பில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் திரு. M.P. வசந்தராஜ் என்பவர் ஆக்கிரமிப்பு செய்து சட்டத்திற்கு புறம்பாக கட்டுமானப் பணியை மேற்கொண்டு அதில் அலுவலகம் அமைத்து செயல்பட்டு வருகிறார். மேற்கண்ட ஆக்கிரமிப்பால் அங்குள்ள மாரியம்மன் கோவிலுக்கு வரும் பக்தர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட மேற்கண்ட அலுவலகத்தையும் மேலும் அங்குள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடுமாறு மாநகராட்சிக்கும், உள்ளாட்சி முறைமன்ற நடுவத்திற்கும் புகார் மனு அனுப்பியதன்பேரில், அங்குள்ள ஆக்கிரமிப்புகள் 70 சதவீதம் அகற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 30 சதவீத ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை. எனவே, மேற்கண்ட

இடத்தில் உள்ள எஞ்சியுள்ள ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5ன் செயற்பொறியாளர் 22.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

> சென்னை பழைய வண்ணாரப்பேட்டை ஸ்ரீரங்கம்மாள் தெரு, தாண்டவராயன் தெரு சந்திப்பில் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக வந்த புகார் மனுவையடுத்து, மாநகராட்சியால் கள ஆய்வு மேற்கொண்டு, மேற்கண்ட தாண்டவரான் தெரு சந்திப்பில் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுவிட்டது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறன். மேலும், மனுதாரர், ஆக்கிரமிப்பின் ஒரு பகுதி இன்னும் அகற்றப்படவில்லை என இம்முறை மன்றத்தில் தெரிவித்துள்ளதையடுத்து, மேற்கண்ட பகுதியில் மீண்டும் ஆய்வு செய்து மேற்கண்ட பகுதியில் எஞ்சியுள்ள ஆக்கிரமிப்புகளும் மாநகராட்சியால் உடனே அகற்றப்படும் என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 5ன் மண்டல அலுவலரின் அறிக்கை, செயற் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் திரு. D. மதன்ராஜ், சென்னை பழைய வண்ணாரப்பேட்டை ஸ்ரீ ரங்கம்மாள் தெரு, தாண்டவராயன் தெரு சந்திப்பில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை திரு. M.P. வசந்தராஜ் என்பவர் ஆக்கிரமித்து கட்டடம் கட்டி உள்ளார் எனவும், அதனை அகற்ற வேண்டி புகார் மனுவில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட இடம், பெருநகர மாநகராட்சிக்கு உட்பட்ட இடத்தை வருவாய் நில ஆவணங்களின் அடிப்படையில் 1.45 மீட்டர், 2.55 மீட்டர் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதை கண்டறிந்து, அவற்றை அகற்ற திரு. M.P. வசந்தராஜ் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது எனவும், அதன் அடிப்படையில் அவர் தாமாக முன்வந்து கூடுதலாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தை 28.5.2023 அன்று அகற்றிவிட்டதாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் அலுவலரின் அறிக்கை மூலம் அறியமுடிகிறது. ஆக்கிரமிப்பு முழுமையாக அகற்றப்படவில்லையென மனுதாரர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்த நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -5ன் செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் எஞ்சியுள்ள ஆக்கிரமிப்பு பகுதியினை மீண்டும் ஆய்வு செய்து, அவற்றினை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து உள்ளார்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 5ன் செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மனுதாரர் குறிப்பிட்ட ஆக்கிரமிப்பு இடத்தை மீண்டும் ஆய்வு செய்து, மாநகராட்சி இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடத்தினை அகற்ற உரிய சட்ட பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை இம்முறைமன்றத்திற்கு 30 தினங்களுக்குள் இம்முறைமன்றத்திற்கு அனுப்பிவைக்கும்மாறு கேட்டுக்கொளளப்படுகிறது.

Further it is the bounden duty of the Zonal field officials concerned to ensure that the streets and roads vested with and under the maintenance of the Greater Chennai

Corporation are kept free of encroachments by a pro-active approach instead of waiting for petitions to be sent by the affected public. Indifference and inaction in this respect are censured by this Forum.

2023–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 4–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. D. மதன்ராஜ்,
112/86, ஸ்ரீ ரங்கம்மாள் தெரு,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை – 600 021.

2) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் - 5, பெருநகர சென்னை மாநகராட்சி,
62, பேசன் பிரிஜ் ரோடு,
பழைய வண்ணாரப் பேட்டை,
சென்னை – 600 021.

4) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.